27—

கணினிமயம்

***108180—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் பதிவாளர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கி சென்னை பதிவாளர் தலைமை அலுவலகத்துடன் இணைத்துக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 559 சார்—பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு ஸ்டார் மற்றும் ரெஜிநெட் திட்டம்மூலம் பதிவுத் துறைத் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. புதியதாக திறக்கப்பட்ட 15 சார்—பதிவாளர் அலுவலகங்களில் கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலகமே கணினிமயமாகியிருக்கிற இந்த வேளையில் மிக முக்கியத் துறை பதிவுத் துறை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பரவலாகச் சொல்லப்படுவது என்னவென்றால் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற சார்—பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படவில்லை; கணினிகள் பொருத்தப்பட்டிருந்தாலுங்கூட அந்தக் கணிணிகள் பழையக் கணினிகளாக இருக்கின்றன என்பதாகும் நவீனமயமாக்கப்பட்ட புதிய கணினிகள் இல்லையென்ற குறைபாடும் இருந்துக்கொண்டிருக்கிறது. கணினிமயமாக்கப்பட்ட இந்த அலுவலகங்கள் மாவட்ட அளவிலே கண்காணிக்கப்படுகின்றனவே

2010 ஏப்ரல் 7]

தவிர, தலைமைப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கண்காணிக்கப்படுவதில்லை.

நிறைய குறைபாடுகள் இருக்கின்றன என்ற கருத்து மேலோங்கி வருகிற இந்தச் சூழ்நிலையில் புதிய கணினிகளைப் பொருத்தி முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டு தலைமைப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அவற்றைக் கண்காணிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் இதுவரை 559 சார்—பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு புதிதாகத் திறக்கப்பட்ட 15 சார்—பதிவாளர் அலுவலகங்களில் 12 சார்—பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படக்கூடிய பணிகள் சில தினங்களுக்கு முன்பாக முடிக்கப்பட்டு தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இருக்கக்கூடிய 3 சார்—பதிவாளர் அலுவலகங்களான அய்யம்பேட்டை, புதுச்சத்திரம், திருப்பனந்தாள் ஆகிய அலுவலகங்களுக்கு, நிதி இல்லாத நிலையில் வருகிற ஆண்டில் நிதியைப் பெற்று அவற்றையும் கணினிமயமாக்கக்கூடிய பணிகள் நடைபெறவிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவுத் துறை என்பது அரசுக்கு வருவாயை ஈட்டித் தரக்கூடிய மிக முக்கியத்துவம் வாய்ந்த துறை. ஆனால் பதிவு செய்கிற நேரத்தில் நிறைய இடைத்தரகர்கள் உள்ளே புகுந்து சொத்து மதிப்பீட்டைக் குறைத்து, குறைவான மதிப்பில் பத்திரங்களைப் பெற்று பதிவு செய்யக்கூடிய ஒரு நிலை எல்லாப் பகுதிகளிலும் மேலோங்கி இருக்கிறது. இது பரவலாகவும் பேசப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் அத்தகைய இடைத் தரகர்களைக் களைவதற்கு அரசு முன்வருமா? அதோடு நில விற்பனையில் பல்வேறு மோசடிகள் எல்லாம் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. ஒருவருடைய சொத்தை மற்றொருவர் போலியாகப் பத்திரப் பதிவு செய்து 'இது என்னுடைய சொத்து' என்று உரிமைக் கொண்டாடக்கூடிய நிலையிலே பல பேர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட முறைகேடுகளையெல்லாம் தவிர்ப்பதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிவுத் துறையின் சார்பாக ஒவ்வொரு இடத்திலும் Guideline Value, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதைக்கூட internet மூலம் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இன்றைக்கு இருக்கிறது. அதனால் விலையைக் குறைத்து மதிப்பிட முடியாது. அரசின் சார்பாக நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிடக் குறைத்து மதிப்பிட முடியாது. இன்னொன்று போலிப் பத்திரங்கள் பதிவு செய்வதைத் தடுப்பதற்காக விற்கக்கூடியவர்களும், வாங்கக்கூடியவர்களும் அவர்களுடைய புகைப்படங்களை ஒட்ட வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டு இன்றைக்கு அது நடைமுறையிலே இருக்கிறது. எனவே, அதுபோன்ற சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிப் பத்திரப் பதிவுகளைத் தடுப்பதற்காக பதிவு செய்பவர்களுடைய படம் ஒட்டப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது ஒரு நல்ல நடைமுறைதான். ஆனால், போலி என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதே மிகப் பெரிய சிக்கலுக்குரியதாக இருக்கிறது. வருவாய்த் துறை மூலமாக இதற்கான ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்திப் பத்திரப் பதிவு செய்யப்படுகிறது. எனவே, ஆவணங்கள் போலியானவையா என்பதைக் கண்டறிவதற்குரிய தனித்த முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருப்பதாக நான் கருதுகிறேன். நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இந்தப் போலிப் பத்திரப் பதிவின் காரணத்தினாலே பல சொத்துக்களைப் பொறுத்தவரை, ஒருவர் அனுபவித்துக் கொண்டு வந்திருக்கிறார், ஆனால் அது வேறு ஒருவருடைய பெயருக்கு அவருக்குத் தெரியாமலேயே

2010 ஏப்ரல் 7]

மாற்றப்பட்டுவிட்டது என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான விளைவுகளைத் தடுப்பதற்காக தனித்த ஒரு முயற்சியை எடுத்து அதற்குரிய சட்டத்தைத் திருத்துவதற்கும், அதற்குரிய நடைமுறைகளைத் திருத்துவதற்குமான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிப் பத்திரப் பதிவைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதில் ஒன்றுதான் புகைப்படங்கள் ஒட்டக்கூடிய வழிமுறை. சில இடங்களில் பதிவு செய்கின்றபோது அதே Sub-Registrar Office—ல்தான், அந்த Jurisdiction—க்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த Sub-Registrar Office—ல்தான் பதிவு செய்ய வேண்டும் என்ற விதிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது போலிப் பதிவுகள் இன்றைக்கு தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் வருவாய்த் துறையோடு கலந்து பேசி அதை முடிவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது காலதாமதம் ஏற்படுவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட தங்களுடைய யோசனையைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

28—

கல்வி அலுவலர்

***101855—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?